தரத்தில் நிகரற்ற
மான், முயல்
விளக்கு, வரிக்குதிரை
செவன மார்க
ஓடிகளுக்கு
மு. தா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8

ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 பங்குனி 9 ஜ-அவ் 4 இதழ் 41
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22 3 80

நிகண்டிசன்
HONDA
250 C.C.
சிறந்த முறையில்
உடன் பெற்றுக்
கொள்ளலாம்
மலிவு விலையில் பிசென்ஸ்
ஒழுங்கு செய்யப்படும்
பல்க்கன் ஏஜன்சி
ஐந்துசந்தி,
யாழ்ப்பாணம்

அமைச்சர் சிறில்மத்தியூ மீதான

# குற்றச்சாட்டுகளை விசாரிக்க

# பாராளுமன்றத் தெரிவுக் குழு

## 'அமிர்' பிரேரணை சமர்ப்பிக்க சிறிமா வழிமொழிந்தார்

(கொழும்பு)

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூவுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கோரும் எதிர்க்கட்சிகளின் பிரேரணையை எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இப்பிரேரணையை வழிமொழிந்தார்.

### பிரதமர் கருத்து

இப்பிரேரணை குறித்து அரசாங்க தரப்பினருக்கு எதுவித ஆட்சேபனையும் கிடையாது என்றுபிரதமர்திரு ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் பெயரில் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. (ம-இ)

## பிரேரணை விபரம்

(கொழும்பு)

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பிரேரணை விபரம் வருமாறு:-

1, இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் முகாமைப்பணிப்பாளர் கலாநிதி கே. கே. ஜி. விஜயதிலக 1980ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ... தமது முகாமைப்பணிப்பாளர் பதவியை ராஜினாமாச் செய்ய நேர்ந்த சூழ்நிலை சம்பந்தமாகவும்,

2. (அ) தொகை மதிப்பீட்டுக் குழுத்தலைவர் கலாநிதி ஜெயதிலகாவை கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் பிரத்தியேகமான முறையில் வசப்படுத்த முயற்சித்ததன்மூலம்,

(ஆ) எஸ். என் ஏ. எம். நிறுவனத்திற்கு ''உம்மை உதவும்படி அமைச்சர் வேண்டுகிறார். அவருடைய சிங்கள நிலையத்திற்கு ஒருகோடி ரூபா தருவதற்கு எஸ். என் ஓ. எம் நிறுவனம் உறுதி அளித்துள்ளது...... மேற்படி நிறுவனத்திற்கு உதவ முயற்சிக்கவும்'' என இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. தகம

(8-ம் பக்கம் பார்க்க)

## மன்னார் நவீன பஸ்நிலையம் மூன்றரை மாதத்தில் பூர்த்தியாகும்

(மன்னார்)

மன்னாரின் புதிய நவீனபஸ் நிலையம் இன்னும் மூன்றரை மாதங்களில் அமைந்துவிடும் இந்த பஸ் நிலையம் அமைப்பதற்கான வேலைகள் கொந்தராத்துக் காரர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மன்னாரில் அமையவிருக்கும் புதிய பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவின்போது வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. டட்லி குணசேகரா கூறினார்

போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது அடிக்கல்லை நாட்டி வைத்தார். மூதூர் எம்பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் தலைமையில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

வடபிராந்திய போக்குவரத்து சபைத்தலைவர் திரு டட்லி குணசேகரா தொடர்ந்து பேசுகையில் மன்னாரில் அமையவிருக்கும் நவீன பஸ் நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைக்க போக்குவரத்து அமைச்சர் வருகை தந்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்

( 8-ம் பக்கம் பார்க்க)

பட்டதாரி மாணவ ஆசிரியர்

# சம்பளத்தை மீளப்பெறும் அரசின்செயல் அநீதியானது

## பாராளுமன்றத்தில் நல்லூர் 'சிவா'

(கொழும்பு)

மாணவ ஆசிரியர்களாக 1967ம்ஆண்டு நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு பின்பு ஒரு தடவை கொடுக்கப்பட்ட பட்டதாரிகள் சம்பளத்தை திரும்பவும் அரசுக்கு செலுத்துமாறு கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது, இது அநீதியான நடவடிக்கையாகும்.

இவ்வாறு நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூறினார். அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:

1967ம் ஆண்டு மாணவ ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு முதலில் மாணவ ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்பட்டதாயினும் பின்னர் கல்லூரி அதிபர்களிடம் இருந்து திரட்டப்பட்ட விபரங்களின் அடிப்படையில் அவர்களுக்கு பட்டதாரி சம்பளம் வழங்கப்பட்டது. மீண்டும் அந்த நியமனம் தவறு என்க் கூறப்பட்டு அவர்கள் ஏற்கனவே கூடுதலாகப்பெற்ற பட்டதாரிகளுக்கான சம்பளத்தை அரசுக்குத் திருப்பிச் செலுத்துமாறு இப்போது உத்தரவிடப்பட்டுள்ளது.

அவ்வாறு நியமனம்பெற்ற பட்டதாரிகளின் சம்பளத்திலிருந்து தலா 14 ஆயிரம் ரூபாவை மாதாந்தம் 150 ரூபா வீதம் அரசுக்கு திரும்பச் செலுத்துமாறு இப்போது உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவை ரத்துச்செய்ய வேண்டும். ஒத்திவைப்புப் பிரேரணையின்போது கேட்கப்பட்ட இக்கேள்விக்குப் பதிலளித்த பாராளுமன்ற விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகக் கூறினார். (ம-இ)

## சுப்பிரமணியம் தமிழ்நாடு இ. காங். தலைவர்

புதுடில்லி மார்ச் 21

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவராக திரு. எம். பி. சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திரா காங்கிரஸ் மத்திய பாராளுமன்றக்குழுவின் ஆலோசனையை அடுத்தே திருமதி இந்திராகாந்தி திரு. எம். பி. சுப்பிரமணியத்தை தமிழ்நாட்டின் தலைவராக நியமித்தார்.

திரு. சுப்பிரமணியம் முன்னர் தமிழ்நாடு பிரதேச பொதுச்செயலாளராக இருந்தார். (இ)

யாழ். ஆஸ்பத்திரி கத்திக்குத்து சம்பவம்:

# சந்தேக நபர்கள் மூவரும் பொலிஸில் சரண்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வார்ட் ஒன்றில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவம்தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டுவந்த மூன்று சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் யாழ். பொலிஸ்நிலையத்தில் சரணடைந்தனர்.

மண்டைதீவைச் சேர்ந்த சந்தேகநபர்களான ஸ்ரீகாந்தராசா, கைலைவாசன், சிவபாலன் ஆகியோர் யாழ். பொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டர் திரு. திருச்சிற்றம்பலம் முன்னிலையில் சரணடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் ஆனந்தன் என்பவர் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

மேற்படி சம்பவத்தில் வார்ட்டில் சிகிச்சைபெற்று வந்த மண்டைதீவைச்சேர்ந்த சண்முகலிங்கம் சிறீதரன் மரணமடைந்ததும் தெரிந்ததே.

யாழ்.பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் எஸ். திருச்சிற்றம்பலம், கான்ஸ்டபிள்கள் பி. மகேந்திரன், வி. தேவராசா ஆகியோர் மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (கொ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

யாழ். நகருக்குள் நல்ல வசதியுடைய வீடு அல்லது கிட்டங்கி வாங்குவதற்கு உடன் தேவை. நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். விபரங்களுக்கு றேடியோ மனுவல், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5246

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள ஈ. எல். மொடல் (Austin Cambridge) ஒஸ்ரின் கேம்பிறிஜ் கார் விற்பனைக்குண்டு. தொடர்: சந்திரா பெனியன் தொழிற்சாலை, பிறவுண்வீதி, 4-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 527

## பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சியும், 3 மாத மின்னியல் டிப்ளோமா பயிற்சியும் 10-04-1980ல் ஆரம்பமாகின்றன. Institute of Engineering Technology, 11/B. Momsac Building, Stanley Road, Jaffna. 5259

## முதற்கண் இறுதிக்கட்டளை அறிவித்தல்

**ஊர்காவற்றுறை**
மாவட்ட நீதிமன்ற

காரைநகர் மேற்கு, தங்கோடையைச் சேர்ந்த பொன்னையா தாமோதரம்பிள்ளையின் மரணசாதனச்சொத்து விடயத்தில்,

- மரணமெய்தியவர்

மாரணசாதனத் தத்துவ வழக்கு இல: 12

தாமோதரம்பிள்ளை கைம்பெண் இராசலட்சுமிதேவி, தங்கோடை, காரைநகர்.

- மனுதார்.

மேற்படி வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றதில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க குறித்த மரணசாதனம் நிருபிக்கப்பட்டதென்ற முதற்கண் இறுதிக்கட்டளை பதியப்பட்டிருக்கிறது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1980ம் ஆண்டு பங்குனி மாதம் 3-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்.

தயாரித்தவர்;
**அ. மரியாம்பிள்ளை**
மனுதாரின் சட்டத்தரணி.

**உண்மைப்பிரதி**
**அ.** மரியாம்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி.
52

## ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற சின்னத்தம்பி சோமசுந்தரம் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

-மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம்

சின்னத்தம்பி சோமசுந்தரம் கைம்பெண் இராசம்மா, கரப்பிட்டியந்தனை, காரைநகர்.

-மனுதார்.

இல: ரி/02

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு பங்குனி மாதம் 7ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி.

தா. குலஞானம்
பதிவாளர்.

1980ம் ஆண்டு ஐப்பசிமாதம் 18ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
7-2-80

காரணம் காட்டும் திகதி 28-3-80க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தா. குலஞான
பதிவாளர்.
5270

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# ஒரு 'ஜோதி' அணைந்தது

சிறுபான்மைத் தமிழ் மக்களின் சமூக, கல்வி, பொருளாதார விடுதலைக்ககாவும் முன்னேற்றத்துக்காகவும் சுமார் 40 வருட காலமாகப் பாடுபட்ட ஒரு ஜோதி அணைந்து விட்டது!

சிறுபான்மைத் தமிழ் மக்களின் ஜீவாதாரமான தொழிலாகிய தெங்கு பனம் பொருள் உற்பத்தித் தொழிலை கூட்டுறவு முறையில் சீராகவும், சிறப்பாகவும் செயல்படுத்துவதற்கு தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த அந்த ஒளி நேற்று முன் தினம் யாழ். தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க சமாஜ நிலையத்தில், காலையிலே - சிவல் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொண்டிருக்கும் பொழுது மாரடைப்பால் மயங்கி விழுந்தார் -அமரராகி விட்டார் - சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணித் தலைவர் முன்னாள் செனட்டர், தெ. ப. உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவர் அமரர் ஜி. நல்லையா!

### வாழ்க்கை வரலாறு

அரச கூட்டுத்தாபனத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய ஜி. நல்லையா சிறுபான்மைத் தமிழ் மக்களின் சமூக விடுதலைக்காக உழைப்பதற்கு வேலையிலிருந்து ராஜினமாச் செய்தார்.

சங்கங்களின் ஸ்தாபகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு சிறப்பாகத் தொண்டாற்றினர்.

சிறுபான்மைத் தமிழ் மக்களின் சமூக முன்னேற்றம் கருதி தொடர்ந்து சிறுபான்மைத தமிழர் விடுதலை முன்னணியில் சேர்ந்து உழைத்தார் அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். சென்ற யாழ். மாநகரசபைத் தேர்தலில் ஐ.தே. க. உறுப்பினராகப் போட்டியிட்டார்.

இவர் ஜனதியால் நியமிக்கப்பட்ட யாழ். மாவட்ட அபி

(7-ம் பக்கம் பார்க்க)

## பிறந்ததின வாழ்த்து!



நல்லூர் 113 கோவில் வீதி மகாதேவன் ஸ்ரீ ருஜினி இன்று தனது எட்டாவது பிறந்ததினத்தைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார். அவர் சீரும் சிறப்புடன் நீடூழி வாழ்க என அம்மா ஸ்ரீருஜாம்பாள், தம்பி தர்மதுமார், மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அப்பப்பா வேலுப்பிள்ளை, அம்மம்மா, மலர் அக்கா வாழ்த்துகிறார்கள்.
5276

## ஏ. வி. மாணிக்கம்

1945ம் ஆண்டு சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராகச் சேர்ந்து, தீண்டாமை ஒழிப்புக்காகப் பாடுபட்டார். இதனால் அவர் பட்ட கஸ்டங்கள்- துன்பங்கள் அனந்தம்.

1956ல் தமிழரசுக் கட்சியின் உபதலைவராக இருந்து. தமிழ் மக்களின் மொழி உரிமைக்காகப் பாடுபட்டார். 1957, 1958ல் சிறி எதிர்ப்பு, சட்டமறுப்பு போராட்டங்களில் கலந்து கொண்டு, யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் சிறையிருந்தவர்.

தமிரசுக் கட்சியினரால் 1956ல் முதல் செனட்சபை உறுப்பினராகச் சிபார்சு செய்யப்பட்ட அமரர் நல்லையா, சில வருஷங்களின் பின் சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றம் தொடர்பாக, தமிழரசுக்கட்சியினருடன் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால் கட்சியிலிருந்து விலகியிருந்தார்.

1972ல் இருந்த முன்னாள் நிதிமந்திரி கலாநிதி என். எம் பெரேராவினால் கொண்டு வரப்பட்ட தெ. ப. ச. வி. கூ.

## "வெளிக்களம்" விஞ்ஞான இதழ்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலைய இளைஞர் கழகம் "வெளிக்களம்" என்ற இதழ் ஒன்றினை வெளியிடவுள்ளது. இவ்விதழில் பிரசுரிப்பதற்கான கட்டுரைகள் பாடசாலை மாணவர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. தரமான கட்டுரைகளைத் தெரிவு செய்வதற்காக 23 பாடசாலைகளின் மாணவர்கள் கலந்து கொண்ட கட்டுரைப் போட்டியொன்று அண்மையில் நடைபெற்றது முதல் மூன்று கட்டுரைகளையும் தெரிவுசெய்து "வெளிக்கள"த்தில் பிரசுரிக்க ஏற்பாடாகியுள்ளது. இக்கட்டுரைப் போட்டிகளை இளைஞர் கழகத்தின் காப்பாளர் செல்வி தேவகி தில்லையம்பலம் பொறுப்பேற்று நடாத்தினர்.

ஜூன் மாதத்தில் வெளிவரவுள்ள "வெளிக்களம்" பத்திரிகையின் ஆசிரியராக திரு. பி. நடராசன் பொறுப்பேற்றுள்ளார்.

ஆங்கிலத்தில் இதழொன்றினை நீண்டகாலமாகவே வெயிட்டு வரும் வெளிக்களத்தினர் முதன் முறையாக விஞ்ஞான ஆய்வுகளை - ஆய்வு முறைகளைத் தமிழிலும் தர முயன்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (நா)

## பண்டிதமணியின் "கம்பராமாயணக் காட்சிகள்"

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் நான்காவது வெளியீடாக இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் "கம்பராமாயணக் காட்சிகள்" என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலொன்று அடுத்த மாதம் வெளிவரவுள்ளது.

பண்டிதமணிநூல் வெளியீட்டுக் கழகச் செயலாளரும், முத்தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தின் செயற்குழு உறுப்பினருமான திரு. அ. பஞ்சாட்சரமும், முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் செயலாளர் திரு க. சொக்கலிங்கமும் நூல் வெளியீட்டு முயற்சிகளைக் கவனித்து வருகின்றனர். (நா)


# சி. எம். ரி.
## எக்ஸ்பிரஸ் பஸ் சேவை

தினசரி, யாழ்ப்பாணத்திற்கு

**ஆசனப்பதிவுகள்:**

கொழும்பு-1. நியூகொழும்பு ஸ்டோர்ஸ், 241, 243, காலிரோட், கொழும்பு-6 தொலைபேசி, 84788

2. ராஜேஸ்வரி பிராமணாள் ஹோட்டல் & ஸ்டோர்ஸ், 69, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11 தொலைபேசி: 25939

3. யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம், (கொழும்பு கந்தோர்) 154, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13 தொலைபேசி: 35620

யாழ்ப்பாணம்:1. யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம், 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: யாழ்ப்பாணம்- 370- 438- 537

புறப்படுதல்: கொழும்பு, காலை5-15மணி-வெள்ளவத்தை பொதுமார்க்கெட்டுக்கு எதிரில்
காலை 5-45 கோட்டை புகையிரத நிலையத்திற்கு எதிரில்
1, யாழ்ப்பாணம்:- காலை 7-00- இல: 420, ஆஸ்பத்திரிரோட்.
2. கிருஷ்ண விலாஸ் ஹோட்டல், கொடிகாமம் காலை 7-30

**த சிலோன் மோட்டார் ட்ரூன்ஸிட் கம்பனி (1955) லிமிட்.,**
(கொலெட்ஸ்கூட்டு கம்பனிகளின் அங்கத்துவ நிறுவனம்)
101, டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கொழும்பு-8.
தொலைபேசி- 96101-5 91053



## விற்பனைக்கு

சாவகச்சேரி, கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலைக்கருகாமையில், பன்னிரண்டு பரப்புக்காணி புதிய வீடு, கிணறு ஆகியவற்றுடன் உடன் விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. சோமசுந்தரம், 302, பருத்தித்துறைவீதி, நல்லூர். 5263


## பதவி வெற்றிடம்
### யாழ். நகர கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

**பொதுமுகாமையாளர் தரம் III**

தகைமைகள்:

1. கூட்டுறவுப்பயிற்சிபெற்றுள்ள பட்டதாரி. அல்லது
2. 3 வருடகால அனுபவத்துடன் கூட்டுறவுவேலையாளர் உயர்தர தராதரப்பத்திரம். அல்லது
3. 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர். அல்லது
4. ரூபா 20,00,000/-இனை வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபாரத்தாபனமொன்றின் மேல்முகாமைப் பதவியொன்றில் 3 வருடகால அனுபவமுடைய ஒருவர்.

சம்பள அளவுத்திட்டம்: 340—590 ......... 15X10, 20X5 (இத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனையபடிகளும் வழங்கப்படும்)

வயது: 25—40.

விண்ணப்பங்கள்யாவும் வேண்டிய தகவல்களுடன் தயாரிக்கப்பட்டு தலைவர், யாழ். நகர க. தொ. கூ. சங்கம், 121 1/1 கிட்டங்கித்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 05-04-80இல் அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும்.

ஜே. எஸ், அழகையா,
தலைவர்,
யாழ். நகர க. தொ. கூ. சங்கம்
5271

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**
பட்டினியாகக்கிடக்கும் ஒரு மனிதனுக்கு கடவுள் உணவாகவே தோற்றுவார்.
—மகாத்மாகாந்தி.

## மக்கள் கருத்து

### கிளிநொச்சி

### 1980 சிறுபோகம்

1980 ம் ஆண்டு சிறுபோகத்தில் 5 ஏக்கருக்குள் கமம் வைத்திருப்பவர்கள் ஒன்றரை ஏக்கரும் அதற்கு மேற்பட்ட காணியுள்ளவர்கள் காற்பங்கும் விதைக்க அரசாங்கம் அனுமதித்திருக்கின்றது. இது ஒரு நியாயமான ஏற்பாடு.

இது இப்படியிருக்கப் பெரிய கமக்காரர், சிறிய கமக்காரரிடம் இருந்து அவர்களுடைய பங்கை விலைக்கு வாங்கித் தங்கள் காணியில் விதைக்கின்றூர்கள். கிளிநொச்சிக் காணிக்கந்தோரில் ஒரு பெரிய திருவிழாவே நடக்கின்றது. அந்தக் கந்தோரில் காப்புறுதி வசூலிக்க ஆட்கள்; குழுக்காசு வசூலிக்க ஆட்கள்; மற்றும் நீர்வரி வசூலிக்கவும் ஆட்கள்' இவ்வளவும் செய்துதான் பங்குகள் மாற்றப்படுகின்றன.

இப்படியாக நூற்றுக்கணக்கான பங்குகளை ஒரு சில பெரிய கமக்காரர் வாங்கித் தங்கள் தங்கள் சொந்தக் காணிகளிலும் குத்தகைக் காணிகளிலும் விதைத்து அதிக லாபம் ஈட்டுகிறூர்கள். பங்குகளை விற்ற சிறிய கமக்காரர்களே தங்கள் நேரத்தை வீணுக்கி தொழிலற்று இருக்கின்றனர்.

இரணைமடுக்குளத் தண்ணீரை இந்தப் பெரிய கமக்காரர்களே பயன்படுத்துகிறூர்கள். வசதியுள்ள ஒரு சில கமக்காரருக்குத்தான் தண்ணீர். இதைத் தவிர்க்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். தண்ணீர்ப் பங்கு விற்பதையும் மாற்றுவதையும் நிற்பாட்டி, எல்லா விவசாயிகளும் தங்கள் தங்கள் காணிகளில் விவசாயம் செய்ய வற்புறுத்தப்படல்வேண்டும். உண்மையாகப் பிட்டிக்காணிகளாயின் அவற்றில் உப உணவுகள் பயிரிடச் செய்யவேண்டும்.

அரசாங்கம் இதைக் கவனத்திற்கு எடுத்து தண்ணீர்ப் பங்கு "மாற்றுவதை" உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். தண்ணீர்ப் பங்குகளை மாற்றுவதை நிறுத்தினுல் ஊழல்கள் இல்லாமற் போகும்.

**ச. பரமநாதன்**
பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

உரும்பராயில்

### தமிழக அறிஞர்கள் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)
தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் புலவர் கரு. செல்லமுத்து "மேன்மைகொள் சைவநீதி" என்ற தலைப்பிலும், புலவர் அரங்க. நெடுமாறனூர் "குன்றுதோறு ஆடிய குமரன்" என்ற பொருள் பற்றியும் நீர்வேலிக் கந்தசாமி கோயிலில் எதிர்வரும் திங்கள் மாலை சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

பிரமஸ்ரீ க. இராஜேந்திரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியை நீர்வேலி இந்துசமய அபிவிருத்திச் சபை ஒழுங்கு செய்துள்ளது. (அ)

# "எம்மைமதிக்கும் அமைச்சர்களை வெளிப்படுத்துவதில் தவறில்லை"

## இன்றைய நிலையை விளக்கி கூட்டணி அறிக்கை

(கொழும்பு)
"தனித்தேசிய இனமான தமிழினத்திற்கு முன்னர் இருந்த இறைமையை மீண்டும் நிலைநாட்டுவதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரே லட்சியம்"

இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் கூட்டணியின் கொள்கைகள்பற்றி பலவிதமான கருத்துக்கள் நிலவுவதால் எமது அடிப்படையான கருத்துக்களை வெளிப்படுத்தவே இவ்வறிக்கையை வெளியிடுவதாகக் குறிப்பிட்டுள்ள திரு. சிவசிதம்பரம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஒரு விடுதலை இயக்கம் நாடாளுமன்றத்துக்குள்ளே செயல்படும்போது இனத்தின் விடுதலையை அடைவதற்குச் செய்யும் கருமங்களோடு, நாளாந்தம் தமிழ் மக்களுக்கும் மற்ற மக்களுக்கும் ஏற்படுகின்ற பல அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்னைகளை அலசி ஆராயவேண்டிய கடமையும் உண்டு. இந்த விடயங்களில் நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கு இன்றைய அரசாங்கத்தை எப்படிக் கணிக்கின்றேம் என்பதைப் பொறுத்து நமது நடவடிக்கை அமையும்.

ஒரு இனத்திற்கு மேலாக இரண்டு மூன்று இனங்கள் வாழ்கின்ற நாட்டில் மக்களுடைய இறைமை என்று கூறுகின்ற பொழுது எல்லா இன மக்களின் இறைமையையும் மதிக்கவேண்டுமென்பதை மறந்து விடுகின்றூர்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் ஆற்றிய புதிய அரசியல் திட்டத்தில் மக்களுடைய இறைமை என்று கூறுகின்றபொழுது தமிழ் மக்கள் தனித்தேசியஇனம், அவர்களுடையஇறைமையைப்பேணவேண்டுமென்ற கருத்தை அரசியல் திட்டத்திலே ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படியான ஓர் அரசியல் திட்டத்தின்கீழ் இயங்குகின்ற அரசை நாம் ஒரு ஜனநாயக அரசாகக் கருத முடியாது. ஆகையினுல், இந்த அரசிலுள்ள எந்த அமைச்சரையும் உண்மையான ஜனநாயகவாதி என்று நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆனுல் அமைச்சர்களும் மனிதர்கள் என்ற காரணத்தினுல், பொதுவான ஒரு அரசின்கீழ் இயங்குகின்றூர்கள் என்றுலும், ஒரு சிலர் மனிதாபிமானத்துடன் பழகுவதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்கள் பிரதிநிதிகள் என்று மதித்து ஒரு சில அமைச்சர்கள் சில கருமங்கள் ஆற்றுவதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இப்படியானவர்களை இனம்கண்டு வெளிப்படுத்துவதில் பிழையில்லை என்றுதான் நாம் கருதுகிறேம்.

### முதலாளித்துவ அரசு!

இந்த அரசாங்கம் முதலாளித்துவ அரசு என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கணிக்கின்றது. ஏனெனில் இரண்டரை ஆண்டுகளில் இந்த அரசு கொண்டு வந்த பலபிற்போக்கு மசோதாக்களை தமிழர் விடுதலைக்கூட்டணி வன்மையாகக் கண்டித்து எதிர்த்து இருக்கின்றது. இந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை முற்றுமுழுதாக முதலாளித்துவ சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. என்பதையே தமிழர் விடுதலைக் கூட்டணி கூறுகின்றது.

இந்த அடிப்படையிலேதான் இந்த அரசின் வரவு-செலவுத் திட்டங்களையும், வரவு செலவுத் திட்டங்களினுல் உருவாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

உலகத்திலே பல்வேறு சுதந்திர இயக்கங்கள் சுதந்திரத்துக்காகப் பாடுபடுகின்றன. அதே நேரத்தில் சுதந்திர நாடு அமையும்போது. அது எப்படி அமையும் என்பதைப் பற்றியும் சிந்திக்கத் தவறவில்லை அதேபோன்றுதான் தமிழர் விடுவிக்கப்பட்ட இயக்கமும் நாம் உருவாக்க இருக்கின்ற தமிழ் ஈழம் எந்தவிதமான நாடாக இருக்கும் என்பதை பற்றிச் சிந்திக்கிறது.

### தமிழ் ஈழம் எப்படி இருக்கும்?

முதலாவதாக தமிழ் ஈழம் மதசார்பற்ற நாடாக அமையும், எல்லாச் சமயத்தவர்களும் தம் சமயத்தைக் கொண்டாடுவதற்கு இடம்கொடுக்கின்ற அதே நேரத்தில் அரசு எந்த சமயத்தையும் சேர்ந்ததாக இருக்காது.

இரண்டாவதாக, தமிழ் ஈழத்தில் ஒரு சோஷலிச ஜனநாயக அரசு நிறுவப்படும்.

நாம் சோஷலிசம் என்று பேசும்போது இன்றைக்கு எல்லாரும் பாவிக்கின்ற சோஷலிசத்தைக் கருதவில்லை. விஞ்ஞான ரீதியான ஒரு சோஷலிச அமைப்பைத்தான் தமிழ் ஈழத்தில் நாம் காண விரும்புகிறேம் சுதந்திர இயக்கங்கள் சுதந்திரத்தை விரும்புகின்ற எல்லா மக்களையும் ஐக்கிய இயக்கமாக அமையவேண்டுமென்பதை யாரும் மறுக்கமுடியாது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் சோஷலிசப் பாதையை ஏற்றலும், நாம் அமைக்கின்ற தமிழ் ஈழத்தில், ஒரு சோஷலிச பொருளாதார அமைப்பு இருக்கும் என்று தீர்மானித்தாலும், சுதந்திரப் போராட்டத்தில் எல்லா மக்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டிய கடமை நமக்குண்டு.

மேற்கூறப்பட்ட கருத்துக்களை மீண்டும் கூறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதனுல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுவின் சார்பில் இதனை வெளியிடுகின்றேன்.

# உங்கள்பிரச்னை என்ன?

இது ஒரு புதிய பகுதி. "ஈழநாடு" பத்திரிகை தரும் 'வார அம்சம்'.

உங்களை எதிர்நோக்கும் பல பிரச்னைகளுக்கும் தீர்வு கண்டுபிடிப்பதுதான் இப் பகுதியின் நோக்கம்.

உங்களுக்குப் பல பிரச்னைகள் இருக்கலாம். அது; உங்களுக்கு மட்டுமின்றி, பலரையும் எதிர்நோக்கும் பொதுப் பிரச்னையாகவும் இருக்கலாம். 'அது' என்ன பிரச்னை என்று இப்பகுதிக்கு எழுதுங்கள். நாங்கள் தீர்த்துவைக்கின்றேம்.

ஆனுல் ஒரு சின்ன விஷயம். உங்களுக்குத் தொல்லை தரும் பிரச்னையை நாம் தீர்த்துவைக்க முயற்சிக்கும் பொழுது, அந்தப் பிரச்னையின் தீர்வு, மற்றவர்களுக்கும் பலனுள்ளதாக, - உதவக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்; அவ்வளவுதான்.

இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்ன? உங்கள் பிரச்னையை, தெளிவாக எழுதி, உங்களின் பெயர், விலாசத்தையும் விபரமாகக் குறிப்பிட்டு, எமக்குக் கடிதம் மூலமாக அனுப்பி வையுங்கள். உங்கள் பிரச்னையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அல்லது நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு தீர்த்து வைக்கின்றேம் ஆனுல் கடித உறையில், இங்கு வெளியாகியிருக்கும் விலாசத்தைக் கத்தரித்து ஒட்ட மறக்காதீர்கள். இந்த விலாசம் ஒட்டப்படாமல் எமக்குக் கிடைக்கும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

பிரச்னைகளை எழுதி அனுப்புங்கள். அடுத்த சனிக்கிழமை (29-03-80) முதல் வாரந்தோறும் சந்திப்போம். - ஊடுருவி

'எங்கள் பிரச்னை'
C/o 'ஈழநாடு'
த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.

## தவக்கால நற்சிந்தனை



**பரபாஸ் வேண்டும்**

கூடியிருந்த மக்கள் திடீரென அமைதியடைந்தார்கள். பிலாத்துமுன் இருவர் நிறுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறூர்கள். உங்களுக்கு யார் வேண்டும்?

நோயாளிகளைக் குணப்படுத்தியவர் வேண்டுமா? அல்லது பலவீனரைத் துன்புறுத்தியவன் வேண்டுமா? இறந்த உங்கள் உறவினருக்கு உயிர் கொடுத்தவர் வேண்டுமா? அல்லது உங்கள் உறவினரைக் கொன்றவன் வேண்டுமா? நன்மை புரிந்தவன் வேண்டுமா? அல்லது தீமையே செய்தவன் வேண்டுமா? யார் வேண்டும்? யேசு மௌனமாக நிற்கிறூர். அவர் அவர்களை நிர்ப்பந்திக்க மாட்டார். மக்கள் தாமாகவே தேர்ந்து கொள்ளவேண்டும்.

ஆம், இறைவன் மனிதனின் சுதந்திரத்தை மதிக்கிறூர். எனக்கும் சுதந்திரம் உண்டு என்னுடைய வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் நான் ஒரு தேர்வு செய்கிறேன். அத்தேர்வு இயேசுவைச் சார்ந்ததா? அல்லது பரபாசைச் சார்ந்ததா? நான் கனமான குற்றம் புரியும்பொழுதெல்லாம் இயேசுவைப் புறக்கணிக்கிறேன். அவரையல்ல தேர்ந்தெடுத்தேன்.

ஓ என் யேசுவே, நான் உம்மையும் உம்முடையவற்றையும் தேர்ந்தெடுக்க வரந்தாரும்.

—வண. மேரி பஸ்ரியன் அடிகள்

## சங்கரத்தை பத்திரகாளி அம்பாள்

உலகெங்கும் உமையம்மை ஓராயிரம் நாமங்களுடன் ஒவ்வொரு ஊரிலும் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கிறுள். அன்னையை உள்ளன்போடு வணங்கினுல் வேண்டுவது கிடைக்கும். எண்ணியது கைகூடும்.

சங்கரத்தையிலுள்ள பிட்டியம் பதியிலும் உமையம்மை பேரருளொடு பத்திரகாளி என்னும் நாமத்துடன் வீரபத்திர குருவுடன் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றுள். அன்னையின் அருள வேண்டி தூர இடங்களிலெல்லாமிருந்து வந்து, அன்பும் அருளும் பெற்றுச் செல்லும் பக்தர்கள் பல கோடி. அன்னையின் அருளை நாம் எழுதவோ, சொல்லவோ முடியாது. ஆனுலும் உணர்ந்து உருக முடியும்.

பிட்டியம்பதியில் முதலாயினரின் சுமாரா முதன்மையினருடைய காலத்தில் பிட்டியம்பதியில் ஒரு பரந்த புளிய மரம் இருந்தது. அதில் கூட்டமாகக் கிளிகள் தங்கி வேளாண்மையை அழித்தன. இதனைக் கண்ட முதன்மையினர் அதனைத் தறிக்க முயன்றூர். அப்போது அம்மரத்திலிருந்து வெளிப்பட்ட சர்ப்பம் அவரைத் துரத்தியது. கால்மைல் தூரம் ஓடிய முதன்மையினர் திரும்பிப்பார்த்தார். அங்கே நாகசர்பம் படமெடுத்து ஆடிக் கொண்டு நின்றது. அன்றிரவே அம்மையார் அவருக்கு கனவில் தோன்றி, தனக்கு நிழல் அமைக்கும் படி கட்டளையிட்டார். அடுத்தநாளே முதன்மையினர் ஒரு பந்தல் அமைத்து, நிலமும் இலவசமாக வழங்கினூர்.

அன்று தொட்டு அவரின் சந்ததியினரே கோயில் ஆதீன கர்த்தாக்களாயிருந்து வருகிறூர்கள். இங்கு கோயில் கொண்டருளியிக்கும் பத்திரகாளிக்கு அலங்கார உற்சவம் இருமுறை நடைபெறும். பங்குனி உத்தரத்தன்று சித்திரத் தேர் ஓடுகின்றது. ஆனி உற்சவமும் நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தின் தீர்த்தக் கேணி மகாசிவராத்திரி தினத்திற்கு மறுநாள் பாலாகமாறி அம்பிகையின் அற்புதத்தை உலகறியச் செய்தது. இவ் அற்புதம் நடைபெற்றபோது தீர்த்தக்கேணியில் நாக சர்ப்பம் இரண்டு தோன்றிமறைந்தது.

வெளியூர்களிலிருக்கும்அம்பிகையின் பக்தர்கள், விரைந்து வந்து அலங்கார உற்சவங்களில் கலந்து கொள்கின்றனர். பத்திரகாளியம்மையின் திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அலங்கார உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறும்'

-க. சிதம்பரநாதன்
செயலாளர் சங்கரத்தை இ வா சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "புது வருடகாலத்தில் கட்டுப்பாடற்ற வகையில் பொருள்கள் விநியோகிக்கப்பட வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"தமிழ், சிங்கள புதுவருடங்களுக்குப் போதியளவு உணவு, உடை மற்றும் பாவனைப் பொருட்கள் கட்டுப்பாடில்லாமல் விநியோகிப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் இரவு 9மணிவரை சகல கூட்டுறவுச் சங்கக் கடைகளும் திறந்திருக்கவேண்டும். உணவுப்பொருட்களைப் பொது மக்களுக்குச் சீராக விநியோகிப்பதில் ஏற்படத்தக்க சிக்கல்களையும் தடங்கல்களையும் நாம் அறிந்துகொள்வதற்காகவே இம்மகாநாடு கூட்டப்பட்டுள்ளது"

இவ்வாறு அரசாங்க செயலகத்தில் 'புதுவருடத்தை ஒட்டிய உணவு விநியோகம்' சம்பந்தமான மகாநாட்டில் அரசாங்க அதிபரும், யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி, மகாநாட்டில் கலந்துகொண்ட கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்துபேசிய அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி; "பொதுமக்களது நலனை முன்னிட்டே கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையமுகாமையாளர், சலுசலா முகாமையாளர், நெற் சந்தைப்படுத்தும் முகாமையாமையாளா, கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் எல்லோரும் இதில் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் அளித்ததாக" தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் திரு எஸ். ஞானப்பிரகாசம் பேசுகையில் கூறியதாவது: "கூட்டுறவுச் சங்கங்களுக்கு உணவுக்கட்டுப்பாட்டு இலாகாவும், கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையமும் தரமான பொருட்களை விநியோகம் செய்யவேண்டும். தரமற்ற அரிசியை உணவு இலாகா விநியோகம் செய்வதால் கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் அரிசி ஆலைகளிடமிருந்து நல்ல ரகக் குத்தரிசியைப் பாவனையாளர்களுக்கு விற்பனைசெய்யவேண்டிய நிலைக்குத்தள்ளப்படுகிறார்கள்"

"கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தில் விநியோகம் செய்வதிலுப தில்லுமுல்லுகள் இடம்பெறுவதால் தரமற்ற பொருட்கள் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுவதற்கு ஏதுவுண்டாகின்றது. இந்நடவடிக்கையினால் பாவனையாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மீது அதிருப்தியடைந்து கொள்ளுகின்றார்கள்.

"தனியார் நிறுவனங்களுக்கு நல்ல ரகப் பொருட்கள் சேரும் வகையில் அங்குள்ளவர்கள் முடன்று கருமமாற்றும் முறை ஒழிக்கப்படவேண்டும்" என்றும் திரு. ஞானப்பிரகாசம் வலியுறுத்திக் கூறினார்.

இம்மாநாட்டில் பாவனையாளர் சங்கங்கள் மீது கொண்டுள்ள அவநம்பிக்கை பற்றியும், சங்கங்களின் நிர்வாகத்திற்கு ஏற்படும் கஷ்டங்கள் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் பகிர்ந்து பரிமாறப்பட்டன. (நா)

---

நெடுந்தீவுக் கொலைமுயற்சி வழக்கு:

## விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கொலைமுயற்சி வழக்கில், விசாரணைநடுவில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

விசாரணையைத் தொடர விரும்பவில்லையென்றும், எதிரிகள் சுற்றவாளிகளென்றும் ஜூரிசபையினர் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்தார்.

இவ்வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தின் நீதிபதி ஐ. எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 78 பெப்ரவரி 13ந் தேதி நெடுந்தீவில் சி. பொன்னுத்துரை, சி. பரமலிங்கம், ஆகியோர், இளையதம்பி பரமலிங்கத்தை கொலைசெய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீனிவாசன், சட்டத்தரணி ரி. செல்லத்துரையின் உதவியுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணிகள் ஆர் தவராசா, பி அரவிந்தன் ஆஜரானார்கள். (க-அ)

---

## "வன்னிநாட்டைப்பூர்வீக நிலைக்கு உயர்த்தவேண்டும்"

(கிளிநொச்சி)

"வன்னிநாடு சுதந்திரமாக விளங்கிய காலத்திலே சைவமும், கலாசாரமும் ஓங்கி வளர்ந்தன. எங்கும் செல்வமும் சீரும் சிறப்புற்றோங்கியது. அந்நியர்கள் ஆட்சியங்களினால் சிதைவுற்ற வன்னிநாடு புதிய 'புதிய குடியேற்றத்துடன்' இன்று மறுமலர்ச்சியடைந்து வருகின்றது, இவற்றைப் பூர்வீக நிலைக்குக் கொண்டுவருவது எமது கடமையாகும்."

இவ்வாறு கிளிநொச்சி உதவி அரச அதிபர் திரு.க. சுப்பிரமணியம் கிளிநொச்சிப் பட்டணசபை மண்டபத்தில் நடந்த நாகதம்பிரான் சிவஸ்தலத்தின் திருப்பணிச்சபையின் ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்: பலர் சமூகமளித்தனர். இம் மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆண்டுப் பொங்கலுக்கு வழமைபோல் வேண்டிய பஸ்சேவை நீர் வசதி. சுகாதாரவசதி ஆதியனவற்றைப் புரிய உரிய உரிய அதிகாரிகள் சமூகமளித்து சேவைபுரிய உறுதி கூறினர். செயலாளர் திரு. எஸ். சின்னத்தம்பி, சமாதான நீதிபதி இ. கிருஷ்ணராசா ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் உட்படப் பலர் உரையாற்றினர்.

அண்மையில் சிவபதமடைந்த சிவத்தொண்டர் மு. நல்லையாவின் சேவைநலத்தைப் பற்றி ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் உரைநிகழ்த்தினார். (அ)



### ஒரு தொண்டனின் மறைவு

எங்கே பெரியார்கள் கூடி கோயிற்றிருப்பணி, அநாதை நிலையம், புராணபடனம், குளந்தோண்டல், சிரமதான முறையில் தெருஅமைத்தல் இத்தியாதிய நற்கருமங்களைப் பேசக் கூடுகிறார்களோ அங்கே மீசாலையைச் சேர்ந்த முத்தையா நல்லையா என்ற தொண்டரைத் தவறாது காணலாம். இன்று அவர் நம்மிடையே இல்லை.

நன்கு படித்திருந்தும் இவர் உழுதுண்டு வாழ்தலையே மேற்கொண்டமையால் கண்டாவளைக்கப்பாலுள்ள புளியம்பொக்கணையில் குடியேறி சிறந்த விவசாயியாகி அரசினர் விவசாயப்போட்டிகளில் முதன்மையிடம் பெற்று விவசாய மன்னன் என்ற விருதையும் பெற்றார்.

இவர் புளியம் பொக்கணை நாகதம்பிரான் சிவன்கோவில், உருத்திரபுரம் சிவாலயம், கலவெட்டித்திடல் அம்மன் கோயில் பரிபாலனத்திற்குப் பெரிதும் உதவிவந்தார். கோவிற்றிரவியங்கள் துர்ப்பிரயோகமாவதைக் கண்டாற் சகிக்க மாட்டார். இவ்வகையில் ஒரு நீதிமானாகவும் விளங்கினார். கிராமத்தில் நடைபெறும் காரியங்கள் யாவற்றிலும் ஈடுபாடு கொண்டு எவரையும் அன்பினால் வசீகரித்தமையால் பாலர் முதல் விருத்தர் ஈறாக இவரைத் தொண்டர் நல்லையா என்றே அழைப்பார்கள். அன்னாரது மறைவு விவசாயத்துறைக்கும் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அவர் ஆன்மா சாந்தியடைக.

-ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம்.

---

தெல்லிப்பழை மயானத்தில் சடலம்:

## சந்தேகநபர்மீது கொலைக் குற்றச்சாட்டு

(மாவிட்டபுரம்)

ஏழாலையைச்சேர்ந்த ஒருவர் தெல்லிப்பழை மயானமொன்றில் கொலையுண்டுகிடந்தது தொடர்பாகத் தேடப்பட்டு நீதிமன்றத்தில் சரண்புகுந்த சந்தேகநபர்மீது கொலைக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதையடுத்து அவர் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

ஏழாலையைச்சேர்ந்த கந்தையா தில்லையம்பலம் என்பவரே கத்திவெட்டுக்காயங்களுடன் தெல்லிப்பழை கிழக்கிலுள்ள மயானமொன்றில் இறந்துகிடக்கக் காணப்பட்டவராவார்.

இதுதொடர்பாக சுன்னாகம் பொலிஸாரால் தேடப்பட்ட மல்லாகத்தைச்சேர்ந்த மாதன் மகாலிங்கம் என்ற சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் சரண்புகுந்ததையடுத்து றிமாண்டில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடப்பட்டிருந்தார்.

அந்நபர்மீது கொலைக்குற்றச்சாட்டின்பேரில் சுன்னாகம் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத்தாக்கல்செய்ததையடுத்து நீதிபதி திரு. சி ஆர். இராஜசிங்கம் அவரை இம்மாதம் 25ந் திகதிவரை றிமாண்டில்வைக்குமாறும்அன்று வழக்கு விசாரணையை ஆரம்பிப்பதாகவும் கூறினார். (அ)

---

புங்குடுதீவில்

### கும்பாபிஷேகம்

[புங்குடுதீவு]

புங்குடுதீவு ஐயனார் கோவில் என அழைக்கப்பட்டுவரும் பாணாவிடைச் சிவன்கோவில் மகாகும்பாபிஷேகம் அடுத்த மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ளது.

நயினை சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார். விசேஷ சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை ஆலய தர்மகர்த்தாசபையின் உறுப்பினர் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் மேற்கொண்டு வருகிறார். [கு]

---

## கைக்கடிகார ஆசை உயிருக்கு உலைவைத்தது!

(மாவிட்டபுரம்)

கைக்கடிகார ஆசை பத்தொன்பது வயது இளைஞர் ஒருவரின் உயிருக்கு உலை வைத்து விட்டது.

வசாவிளானைச் சேர்ந்த செல்வன் மகாராசா என்னும் இந்த இளைஞர் கைக்கடிகாரம் வாங்கத் தாயார் பணம் கொடுக்க மறுத்தமையால் நஞ்சருந்தி மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இம் மரணம் தொடர்பாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு.நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் காலமானவரின் தாயார் வள்ளிப்பிள்ளை சாட்சியமளிக்கையில்; காலமானவர் பொது மராமத்துப் பகுதியில் தொழில் செய்து வருவதாகவும், அங்கு வழங்கப்பட்ட சம்பளத்தை தம்மிடம் தந்துவிட்டு தமக்கு ஒரு கைக்கடிகாரம் வாங்க பணம் தருமாறு அவர் கேட்டதாகவும், குடும்ப நிலைபெரிதும் கஷ்டமயிருப்பதாலும், செலவுக்காக கடன் வாங்கியபணங்களைக் கொடுக்க வேண்டியிருப்பதாலும் கைக்கடிகாரம்வாங்க பணம் தரமுடியாது எனத் தாம் கூறியதாகவும் இதனையடுத்து தோட்டத்திற்குச் சென்ற காலமானவர் அங்கிருந்த நஞ்சை எடுத்து அருந்தியதாகவும் தெரிவித்தார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது காங்கேசன்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (கு)

---

### ஆசிரியர் பற்றுக்குறை

(மன்னார்)

தலைமன்னார் அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலையில் ஆசிரியர் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது இதனால் அப் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

முன்னர் 17 ஆசிரியர்கள் கடமையாற்றிய இப் பாடசாலையில்தற்போது 7 ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுகிறார்கள்.

---

### ஹிஜ்ரி பாடசாலை

(மன்னார்)

எருக்கலம்பிட்டியில் சுயமுயற்சித்திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்ட ஹிஜ்ரி ஞாபகார்த்த பாடசாலைக் கட்டிடத்தை போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமது திறந்துவைத்தார்

இவ்வைபவத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திரு. மீ லஸ் பெர்னாண்டோ, மூதூர் எம். பி யும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். எச். மஹ்றூப் [illegible] பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

---

### பத்திரிகையாளருக்கு சிறை வாசம்

(மொன்ரிவிடியோ)

உருகுவே ஜனாதிபதிக்கு அவமானம் ஏற்படும் வகையில் கட்டுரை எழுதினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் 'ரியூ புஸ்கோடா' என்ற சஞ்சிகையின் ஆசிரியர் ராமன் டியஸ் என்பவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவர் சம்பந்தப்பட்ட கட்டுரையை எழுதியிருந்தார். (நா)

......

### இரவுச் சந்தை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மைதானத்தில் இரவுச் சந்தை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் வசதியாக இந்த இரவுச் சந்தையை தொழிற்சாலை நலன்புரிச் சங்கத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

தொழிற்சாலை முகாமையாளர் திரு சூரியகோமு [illegible] பொருட்களை [illegible] சந்தையை ஆரம்பி[illegible] தார் தெல்லிப்பழைப் ப நோ. கூ. சங்கம், மாவை கி. மு சங்கம் ஆகியவற்றின் விற்பனை நிலையங்கள் இடம்பெற்றிருந்தன தொடர்ந்து [illegible]கிழமைகள் தோறும் நடைபெறவுள்ள இச்சந்தை [illegible]லும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

---

கந்தர்மட கொள்ளை வழக்கு:

## 1-ம் எதிரியை வைத்திய சோதனை செய்யக் கட்டளை

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மட கொள்ளை வழக்கு, நேற்று யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதி ஐ ஜனாப் எம் ஜாமில் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஜூலை மாதம் 14-ம் தேதிக்கு பின்போடப்பட்டது.

இவ்வழக்கில், 77 நவம்பர் 2ம் தேதி மாணிக்கம் நடராசா, கந்தசாமி இராசநாயகம் ஆகியோர் கந்தர்மடத்தைச் சேர்ந்த இராமலிங்கம் பொன்னம்பலம் வீட்டில் ரூபா 22,600 பெறுமதியான நகைகளை கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி கோட்டிற்கு வராமல், ஆயுர்வேத வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பித்திருந்தார். 1ம் எதிரியை சங்கானை வைத்திய அதிகாரி பரிசோதனை செய்து திங்கட்கிழமை கோட்டில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார் 2ம் எதிரியை 2,500 பிணையில் செல்ல அனுமதித்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ராஜேந்திரம் வசந்தசேனன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜரானார். (கொ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை லயன்ஸ்கழக ஆதரவுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் இம் மாதம் 3ம் திகதி தொடக்கம் 8ம் திகதிவரை நடைபெற்ற தொழில்நுட்பக் கண்காட்சியில் இடம்பெற்ற 'த பிறவுன்ஸ் கம்பனி'யின் காட்சி அறையில் விற்பனை முகாமையாளருடன் மற்றும் உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர்.

# "ஈழவேந்தனின் வேலை இடைநிறுத்தத்தை ஆணையாளர் உடன் வாபஸ்பெறவேண்டும்"

## மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

"தனக்குரிய அரசியல் உரிமைகளைப் பயன்படுத்தி, அரசியல் சார்பான கருத்துக்களை இந்திய நாட்டில் தெரிவித்ததால், இலங்கை மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கத்தின் தலைவர் திரு மா. க. கனகேந்திரன் (ஈழவேந்தன்) கடந்த வருடம் ஜூன் மாதம் 26ந் திகதி தொடக்கம் வேலையிலிருந்து இடைநிறுத்தஞ்செய்யப்பட்டுள்ளார். இச்செயல் நெறிபற்றது என்று சுட்டிக்காட்டி, வேலை இடைநிறுத்த ஆணையை மீளப்பெறுமாறு எமது செயற்குழு கோரி ஏழு மாதங்களாகியும் இன்னும் இவ்வுத்தரவு மீளப் பெறப்படவில்லை. உடன் வாபஸ் பெறவேண்டுமென்று வலியுறுத்துகிறோம்"

மேற்கண்டவாறு இலங்கை மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கத்தின் 1979-80ம் ஆண்டுக்கான அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அறிக்கை மேலும் கூறுவதாவது-

"மேலும் தாமதிக்காது, எமது தலைவரின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரித்து, மேற்குறிப்பிட்ட உத்தரவை ஆளுநர் மீளப் பெறவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இவ்விடயம் தொடர்பாக அரசியல் உரிமைகளைப் பற்றிய வங்கி ஊழியர்களின் நிலைமையைப் பற்றி எம்முடன் சேர்ந்து ஆளுநரிடம் விளக்கம் கோருவதற்கு அழைத்திருந்தும், மத்திய வங்கி ஊழியர்கள் சங்கத்தைத் தவிர மற்றைய சங்கங்கள் எதுவித பதிலும் கொடுக்கவில்லை. இவ்வேளையில் மத்திய வங்கி ஊழியர் சங்கம், திரு. மா. க. கனகேந்திரன் வேலை இடைநிறுத்த விஷயமாக எமக்கு அளித்த ஆதரவை நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறோம்.

### சூறாவளி

"நாம் பதவியேற்றதும், எதிர்பாராததுமான நிலையில் கிழக்கிலங்கையைப் பாதித்த சூறாவளி இடருதவி வேலையில் எமது கவனத்தைச் செலுத்தினோம். எங்கள் உறுப்பினர்கள் மட்டக்களப்பிற்குச் சென்று தமிழ் அகதிகள் மீள்வாழ்வுக் கழகத்தினருடன் சேர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக் கடமை விடுப்புக் கோரி விண்ணப்பித்தோம். ஆனால் அரச நிறுவனம் ஒன்றுடன் சேர்ந்து வேலைசெய்தால் மட்டுமே கடமை விடுப்புக் கொடுக்கமுடியுமென்று எமக்கு அறிவிக்கப்பட்டது. இதில் பல சிக்கல்கள் இருந்தமையால் இடருதவிப் பணியைக் கைவிட்டோம். எனினும் எமது உறுப்பினர்களிடையே பணமும், பொருட்களும் சேகரிக்கப்பட்டு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மூலம் பாதிப்புற்ற மக்களுக்கு எம்மாலியன்ற உதவியைச் செய்தோம்.

### தீர்மானங்கள்

இவ்வாண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

"மற்றைய வங்கிகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் போல மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளத் திட்டத்தை இதுவரை காலமும் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கமைய மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளத் திட்டத்தை மாற்றியமைக்கும்படி இச்சபை வேண்டிக்கொள்கிறது.

"வீடு கட்டும் கடனின் உச்சவரம்பை மீளாய்வு செய்வதுடன், நாட்டின் எப்பகுதியிலும் வீடு கட்டக் கடனுதவி செய்யும்படியும், வட்டி வீதத்தைக் குறைத்து வீடு கட்ட விரும்பும் ஊழியர்களுக்கு ஊக்கம் தரும்படி கேட்டுக்கொள்கிறது.

"அரசாங்கத்தாலும் அரசைச் சார்ந்த தாபனங்களாலும் ஏற்பாடு செய்யப்படும் வீட்டுத் திட்டங்களில் எமது ஊழியர்களும் தனித்தனி வீடுகளாக சிலவற்றை ஒதுக்கித்தருவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகின்றது."

(வெ-கு)

### இடமாற்றமுறை திருப்தி இல்லையாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்விஇலாகாவினால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மாவட்ட அடிப்படையிலான இடமாற்றம் திருப்தியானமுறையில் அமையவில்லை என்று புகார் செய்யப்படுகிறது.

கிராமப்புறப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது ஆனால் இப்பற்றாக்குறை நீடிப்பதால் கிராமப்புற பெற்றோர் பலத்த கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

### 'திருக்குறள் சிறந்த வாழ்வு நூல்"

(ஊரெழு)

"மக்களை மையமாகக் கொண்டு தமிழில் ஒரு சிறந்த வாழ்வு நூலைத் தந்தவர் வள்ளுவர். சிந்தைக்கு இனிய, செவிக்கு இனிய, வாய்க்கு இனிய, என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப்படும் இந்த அருமையான நூலில் அடங்கியிருக்கும் அத்தனை குறள்களையும் மாணவர்கள் மனனம் செய்வதுடன், அதன் வழியில் வாழ்க்கையையும் நடாத்த வேண்டும். எக்காலத்தும் புகழ்பூட்டி அறிவூட்டவரும் திருக்குறளைப் படைத்த வள்ளுவருக்கு இங்கு விழா எடுப்பது மிகவும் பொருத்தமானது.

இவ்வாறு, ஊரெழு கணேச வித்தியாசாலையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் தலைமை வகித்துப் பேசிய திரு. வே. பரமநாதன் கூறினார்.

இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்திய கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ. நடராசா "வாழ்க்கையை நல்வழியில் நடத்துவதற்கு திருக்குறள் நூல் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. அதனை நமக்களித்த வள்ளுவருக்கு விழா எடுத்துக் கௌரவிப்பது அவசியமானதாகும்" என்று குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு ச. கதிரவேலு, மற்றும் திருவாளர்கள். சிவ. மகாலிங்கம், பொ. சிவலிங்கம் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். விழாவின் இறுதியில் [illegible] வழங்கப்பட்டது.

### கருத்தரங்கு

(மாவிட்டபுரம்)

மாங்கொல்லை இளைஞர் முன்னேற்ற மன்றச் சனசமூகநிலையத்தின் ஆதரவில் கிராம வளர்ச்சிக் கருத்தரங்கு ஒன்று நாளை நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

[illegible] தலைமையில் [illegible] நடைபெறும் இக் [illegible] விவசாயம், சுகாதாரம், [illegible]

# 'அமிர்', யோகேஸ் இன்றுமட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் இன்று சனிக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்கிறார். இவருடன் யாழ்ப்பாண எம். பி திரு. வெ. யோகேஸ்வரனும் வருகிறார்.

இவர்கள் இன்றும் நாளையும் மட்டக்களப்பில் தங்கியிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவல்கள் சம்பந்தமாக இப்பகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவர்.

இன்று கற்குடா தொகுதியிலுள்ள பல கிராமங்களுக்கும் சென்று, அங்கு அண்மையில் ஏற்பட்ட சம்பவங்கள் குறித்து நேரில் ஆராய்வார்கள். இவர்களுடன் கற்குடா தொகுதி அமைப்பாளர் திரு. சீ. சம்பந்தமூர்த்தியும் கலந்து கொள்வார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவை அலுவலகத்தில், தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. இரா. வாசுதேவா தலைமையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையினரை சந்தித்து உரையாடுவார்கள்.

நாளை மாலை மட்டக்களப்பில் தமிழ் இளைஞர் பேரவையினரின் அலுவலக முன்பாகவுள்ள மைதானத்தில் நடைபெறும் வீலைவாசி உயர்வு கண்டனக் கூட்டத்தில் கலந்து கொண்டுஉரையாற்றுவார்கள்.

# ஜனாதிபதி மட்டக்களப்பு விஜயம் ஒத்திவைப்பு

[மட்டக்களப்பு]

ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரையின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இம் மாதம் 27ம் திகதி மட்டக்களப்புக்கு உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருந்தார்.

அன்றையதினம் ஜனாதிபதி கலந்துகொள்ளுவதற்காக பல நிகழ்ச்சிகள் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன.

தவிர்க்கமுடியாத காரணத்தால் ஜனாதிபதியின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி ஏப்ரல் மாத இறுதியில் மட்டக்களப்பு விஜயத்தை மேற்கொண்டு தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் தன்னியக்க பரிவர்த்தனை நிலையம், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம் ஆகியவற்றையும் திறந்து வைப்பதோடு மட்டுநகர் நவீன நகர்த்திட்டத்தையும் ஆரம்பித்துவைப்பார் என்றும் அறியப்படுகிறது.

# "கிராம இளைஞர்களின் ஆன்மீக வழிகாட்டி"

[மாவிட்டபுரம்]

ஒரு கிராமத்தில் சமயப் பெரியார்கள், பேரறிஞர்கள் கட்டாயமாக வாழவேண்டும். ஏனெனில் அவர்களது ஆன்மீகத் தலைமைதான் இளம் சந்ததியினருக்கு நல்ல வழிகாட்டக்கூடியது. ஏழாலைக் கிராமத்தில் அமரர் சிற்றம்பல ஆசிரியர் போன்றோர் வாழ்ந்தமையாலேதான் இக் கிராம இளைஞர்கள் ஆன்மீக நெறியைத் தழுவி செயல்படுகிறார்கள்"

இவ்வாறு ஏழாலையைச் சேர்ந்த அமரர் சிற்றம்பல ஆசிரியரது ஞாபகார்த்தவிழாவில் கலந்துரையாற்றிய [illegible] தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

[illegible]த்துவரான் மு. கந்தையா தலைமையில் நேற்று நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

"நம் மத்தியில் வாழும் சைவப்பெரியார்கள், பேரறிஞர்கள் போன்றவர்கள், நமக்குக் கிடைத்த பெரும் பொக்கிசம். அவர்களை நாம் மதித்து கௌரமாக நடத்தவேண்டும். அவர்களது வழியைப் பின்பற்றி நடக்கவேண்டும். இந்த வகையில் ஏழாலைக் கிராம இளைஞர்கள், சிற்றம்பல ஆசிரியர் போன்றவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பது பாராட்டுக்குரியது இக் கிராம இளைஞர்கள் வெளிநாடு சென்றபோதும் இங்குள்ள ஆலயங்களை நினைத்து நிதி அனுப்புவதிலிருந்து அவர்களது சமயப்பற்று வெளிப்படுகிறது என்றார்.

மற்றும் வைத்தீஸ்வரா முன்னாள் அதிபர் திரு ச. அம்பிகைபாகன், 'இந்துசாதனம்' ஆசிரியர் திரு.நம. சிவப்பிரகாசம், திரு. அ. சிவசுப்பிரமணியம், திரு. சீ. பொன்னையா, திரு. நாவேந்தன் ஆகியோரும் பேசினர் செல்வன் சி. சக்திகிரீவன் நன்றி கூறினார்.

# "திட்டமிட்டபடி ஒலிம்பிக் மாஸ்கோவில் நடைபெறும்"

## சர்வதேச ஒலிம்பிக்கமிட்டி அறிவிப்பு

மாஸ்கோ, மார்ச், 21

மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியை அமெரிக்கா பகிஷ்கரித்தாலும் திட்டமிட்டபடி போட்டிகள் நடந்தேதீரும் என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கம்யூனிஸ்ட் நாடொன்றில் ஒலிம்பிக் போட்டிகள் பெற [illegible] வையென்றும் எக்காரணப் [illegible] புறச் [illegible] முதியோர் கல்வி, இளைஞர் சேவை [illegible] உட்படப் [illegible] தப்பட்ட அதிகாரிகள் கா[illegible] கொண்டும் அது தடைப்பட அனுமதிக்க முடியாது என்றும் கமிட்டி தெரிவித்துள்ளது.

மாஸ்கோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியை பகிஷ்கரிப்பதென்று அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துள்ளது. பிரிட்டனும் ஒலிம்பிக் வீரர்களை பகிஷ்கரிக்குமாறு கோரியுள்ளபோதிலும் காம[illegible] நிச்சயமாகக் கலந்துகொள்ளப் போவதாக வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஒ)

இதே வேளையில் ஒலிம்பிக் போட்டியைப் பகிஷ்கரிக்கும் வீரர்களுக்காக வேறொரு போட்டியை நடாத்த அமெரிக்காவும் பிரிட்டனும் ஆலோசனை நடத்திவருகிறது.

(கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திரா காங்கிரஸ் தமிழகத் தலைவர்

# இளையபெருமாளை பதவியிலிருந்து ராஜினுமாச் செய்ய உத்தரவு!

சென்னை, மார்ச் 21

**இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் திரு. இளையபெருமாளை தமது பதவியில் இருந்து ராஜினுமாச் செய்யுமாறு கட்சித் தலைமைப்பீடம் உத்தரவு பிறப்பித்துள்ளது.**

'கட்சித் தலைவர்கள் சிலருக்கும் திரு. இளையபெருமாளுக்குமிடையில் ஏற்பட்ட தகராறு களையடுத்து சில தலைவர்கள் கட்சித் தலைமைப்பீடத்துக்கு முறையிட்டிருந்தனர்.

கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. கருப்பையா மூப்பனுர் அண்மையில் புதுடில்லியில் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து பேச்சு நடத்தினுர்.

ராஜினுமாச் செய்யுமாறு தலைமைப்பீடம் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் திரு. கருப்பையா மூப்பனுர் கருத்துத் தெரிவிக்கையில் "கட்சித் தலைவி திருமதி இந்திராகாந்தி யாரைத் தலைவராக நியமிக்கின்ருரோ அவரையே எமது தலைவராக நாம் ஏற்றுக்கொள்வோம்" என்ருர். [கு]

## உணவு முத்திரை விசாரணைகள்

(மாவிட்டபுரம்)

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரை விநியோக மீளாய்வு விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணைகள் இன்றும் நாளையும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இம்முறை ஏராளமானேருக்கு உணவு முத்திரை நிறுத்தப்பட்டதையடுத்து அவர்கள் உதவி அரசாங்க அதிபருக்கு புகார் தெரிவித்திருந்ததுடன் தமது வருமானம் பற்றி மீளாய்வு செய்து உணவு முத்திரைகளை மீண்டும் வழங்குமாறும் கோரியிருந்தனர்.

இதனையடுத்து இவ்விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணை இன்றும், நாளையும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர். திய். பி. பஞ்சலிங்கத்திஞல் மேற்கொள்ளப்பட உள்ளது. (கு)

# பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்க வேண்டாம்

## அமெரிக்காவிடம் இந்தியா கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 21

பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்க வேண்டாமென்று இந்தியா அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

இத் தகவலை வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் சோவியத்யூனியனின் தலையீட்டைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடிகளைச் சமாளிக்க பாகிஸ்தானுக்கு அதிக அளவில் ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முன்வந்தது.

இதனையடுத்து அமெரிக்க ஆயுதங்களை பாகிஸ்தானுக்கு தேவையற்றஅளவு வழங்கக்கூடாது என்று இந்தியா இதுவரை கோரிவந்தபோதிலும் இப்போது நேரடியாக அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

இதேவேளையில் வேறு நாடுகள் எதையும் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி வழங்க வேண்டாமென்று வலியுறுத்தியுள்ளது. (கு)

# ரொடீசியாவில்ராணுவசட்டம் நீக்கப்பட்டது!

## அரசியல் கைதிகளும் மன்னிக்கப்படுவர்

சாலிஸ்பரி, மார்ச் 21

**சிம்பாப்வே ரொடீசியாவில் கடந்தஇரண்டு ஆண்டுகளாக அமுலில் இருந்த ராணுவச்சட்டம் இன்றிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.**

இதற்கான உத்தரவில் பிரிட்டிஷ் கவர்னர் நேற்றுக் கைச்சாத்திட்டார்.

கடந்த 78ம் ஆண்டு சிம்பாப்வே ருடீஷியாவின் சுதந்திரப்போராட்டத்தின் போது அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ராணுவச் சட்டம் ரொடீஷியா சுதந்திரம்அடையவுள்ள இக்காலத்திலேயே தளர்த்தப்படுகிறது.

இதேவேளையில் சகல அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 18ம் திகதி ரொடீஷியாவுக்கு சுதந்திரம் வழங்கப்படும் என்று பிரதமராகப் பதவியேற்றுள்ள திரு. திரு. ரொபேர்ட் முகாபே தெரிவித்தார். (கு)

# 'முள்ளும்மலரும்' படத்துக்கு தமிழக அரசு முதற்பரிசு!

## லட்சுமி, சிறீகாந்த் சிறந்த நடிகர்கள்

சென்னை, மார்ச் 21

தமிழக அரசு கடந்த 78-79ம் ஆண்டுகளில் வெளியான தமிழ்ப் படங்களில் 'முள்ளும் மலரும்' படத்தை சிறந்த படமாக தேர்ந்தெடுத்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட ஏனைய விபரங்கள் வருமாறு;

சிறந்த நடிகர்: சிறீகாந்த் (கருணை உள்ளம்), சிறந்த நடிகை: லட்சுமி (ஒரு நடிகை நாடகம் பார்க்கிருள்), சிறந்த டைரக்டர்: துரை (ஒரு வீடு ஒரு உள்ளம்), இசையமைப்பாளர்: எம். எஸ் விஸ்வநாதன் (வருவான் வடிவேலன்) பின்னணிப் பாடகர்கள்: மலேசியா வாசுதேவன், வாணி ஜெயராம், கதாசிரியர்: ஜெயகாந்தன், வசனகர்த்தா: கே. பாலச்சந்திரன், துணைநடிகர்: ரஜனிகாந்த், துணைநடிகை: ஸ்ரீபிரியா. (கு)

## பொருட்காட்சி

(ஊரெழு)

ஊரெழு கணேச வித்தியாசாலையின் கல்விப் பொருட்காட்சி பாடசாலை அதிபர் திரு. ச. கதிரவேலு தலைமையில் நடைபெற்றது. திருமதி பொன். கிருஷ்ணபிள்ளை குத்துவிளக்கேற்றியதைத் தொடர்ந்து திரு. வை. கிருஷ்ணபிள்ளை பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குரிய கல்வித்திட்டத்திற்கு அமைவானதும் அவர்களது பாடசோதனைகளை விளக்கும் வகையிலும்அமைந்த பொருட்களுடன் உயர் வகுப்பு மாணவர்க்குரிய கணிதம் விஞ்ஞானம் சுகாதாரம் ஆகிய துறைகளின் நுட்பங்களைச்சித்தரிக்கும் பொருட்களும் குறிப்பாக மனிதனின் குருதிச் சுற்ரேட்டம் சிறுநீரகத்திலுள்ள போமனின் உறையினூடாக சிறுநீர் வடிக்கப்படுதல் ஆகிய அம்சங்களை விளக்கும்வகையில் அமைந்த செய்முறை விளக்க காட்சிப் பொருட்களும் இப்பொருட்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

## முன்னுள் பிரதி அமைச்சர் காலமானுர்

(கொழும்பு)

முன்னுள் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் திரு. நீல்-டி-அல்விஸ் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானுர் (கு)

# தமிழ் இளைஞர் பேரவையின் மேதினக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மேதினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளின் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை, தமிழ்மொழி வழித் தொழிற்சங்கங்கள் ஆகியன கூட்டாக இயங்கி வருகின்றன.

மேதினம் தொடர்பாக இளைஞர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

'மே' நாளினைச் சிறப்பித்திடும் பொருட்டு, தமிழீழஉற்பத்திகளை ஊக்குவிக்கவும், தொழிலாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் உதவிடவும் ஊக்கமளித்திடவும், தமிழீழப்பற்றினையும், தமிழ்த் தேசிய இனப்பற்றினையும் ஊட்டிடவும் ஆகத் தமிழீழ உற்பத்திகளை வாங்கவும், பயன்படுத்தவும் வேண்டும் என விரும்புகிருேம், இதனுல் தமிழ்த் தேசிய இனத்தை அடக்கியாளும் வர்க்கங்களின் சுரண்டல்களை நடைமுறையில் எதிர்ப்பதோடு விடுதலை உணர்ச்சியையும்பெறுகிருேம்.

'மே' நாளில் ஊர்வலத்திலும், கூட்டத்திலும் பங்குபெறுவோர் தமிழ் இளைஞர் பேரவையால் விற்பனை செய்யப்படும் தமிழீழஉற்பத்திகளை வாங்கி உதவிடவேண்டுமென்றும் குறிப்பாக கைத்தறி ஆடைகளை-குறைந்தது ஒரு துவாய் அல்லது சால்வையாவது அணிந்து வர வேண்டுமெனவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்ருேம்.

(கொ-கு)

## மாணவர்கள் சிரமதானம்

(உடுப்பிட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐம்பது மாணவர்கள் கன்பொல்லை மாதிரிக்கிராமத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை சிரமதானப் பணிகளில் ஈடுபட வுள்ளனர்.

கன் பொல்லை மாதிரிக்கிராம அபிவிருத்தி வேலைகளைத் துரிதப்படுத்தும் நோக்கமாக இம்மாணவர் சிரமதானத்தில் ஈடுபடவுள்ளனர்.

## மின்விஸ்தரிப்பு வேலைகள் ஸ்தம்பிதம்

(உடுப்பிட்டி)

நெல்லியடிப் பட்டின சபையின் மின் விஸ்தரிப்பு அபிவிருத்தி வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

மின்சாரஉபகரணங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

இதன் எதிரொலியாக வீடுகளுக்குப் புதிதாக மின்சார இணைப்பு வழங்கும்வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 9 ம் திகதி

(22-3-1980)

சனிக்கிழமை

மேடம்: எதிர்பாராத சிக்கலில் மாட்டிக் கொள்வீர்கள், வியாபார மோசடியும் நடக்கலாம், பணம் பறிபோவதற்கும் இடமேற்படலாம், அவதானம் நன்று.

இடபம், பூமியால் கவலையுண்டு, பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும், வாழ்விலும் நிதானம் நன்று. சுகபோகநாள்.

மிதுனம்: நீண்டநாள் பூமிப் பிணக்கு இன்று நிவர்த்தியாகும், தானிய விருத்திக்கும் இடமுண்டு, தொழிலிலும் தொல்லை நீங்கும்.

கடகம்: ஆத்திர உணர்ச்சியை அடக்கவும், அபிப்பிராய பேதமும் தோன்றலாம், குடும்பத்திலும் அமைதியுடன் இருக்கவும்.

சிங்கம்: வாகனச் சிறப்புமுண்டு, வாழ்விலும் நலனுண்டு, முன்னேற்றமான வழியுமுண்டு, மகிழ்ச்சிகரமான தினம்.

கன்னி: செய் தொழிலால் சிறப்பும் கிடைக்கும், வழக்கு விவகாரங்களுக்கும் முடிவு காணப்படும், கல்வியும் சிறக்கும்.

துலாம்: பகைமூட்டம் தோன்றும், பதட்டமும் உடன் சேரும், தொழிலிலும் கவலை உருவாகும்.

விருச்சிகம்: வெளியிடத்துத் தொடர்பு பெருகும், பிரயாணமும் உண்டு, மனைவி மக்கள் சுகமும் உண்டு.

தனுசு: வாகனம் செலுத்துவோர் மிகக்கவனம் வேண்டும். தானிய நட்டமும் உண்டு, தன் தொழிலிலும் வீழ்ச்சியுண்டு.

மகரம்: கற்றதனுல் பயன் இன்று கிடைக்கும், அறிஞர்கள் சந்திப்பும் கிட்டும், கனிவான தினம், புண்ணிய விருப்பும் மேலிடும்.

கும்பம்: இடமாற்றமுண்டு இல்லச் சிறப்புமுண்டு, மக்களால் மகிழ்ச்சியுண்டு, கடமையும் சிறக்கும்.

மீனம்: பெரியோர் ஆதரவுமுண்டு, காதற்கனை தாக்கும், சுபகாரியம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம், அதிகாரப் பேறும் கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி

**திருமலை**

**க. வேலுப்பிள்ளை**

## மாணவர்கள் கௌரவிக்கப்படுவர்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலைகளிலிருந்து மிகச்சிறந்தமாணவர்களெனத் தெரிவு செய்யப்பட்ட பத்து மாணவ,மாணவிகளும் யாழ். கல்வித் திணைக்களத்தால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அடுத்தமாதம் 1ம் திகதி பிரஸ்தாப மாணவ மாணவிகளுக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கௌரவம் நடைபெறும்.

வைபவத்தில் பாராட்டுசான்றிதழ்களும் வழங்கப்படும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன்
கவிதா நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்)



**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
**சஞ்சீர்** (ஹிந்தி) **SANJEER**

**லிடோ** (யாழ்.நகர்) Daily: 10-30, 3-30, 6-30 & 9-30 போன்: 7698
**Arabian Adveuture**
(Color)



**சாந்தி** (யாழ்நகர்)
போன்: 7642 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - மஞ்சுளா
**உ த் த ம ன்**



**ராணி** கடைசிவாரமும் கடைசிசந்தர்ப்பமும் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
**இ ரு வ ர் உ ள் ள ம்**
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி


## பிரதமர் திறந்துவைப்பார்

(மட்டக்களப்பு)

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும் கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூரின் முயற்சி காரணமாக ஒன்றரை லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் கல்முனை நூல் நிலையத்தை அடுத்த மாதம் பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா கல்முனைக்கு விஜயம் செய்யும்போது திறந்துவைக்கவிருக்கிறார்.

## நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் பனம் பொருள் அபிவிருத்தித் திட்ட வேலைகளை விஸ்தரிக்கும் பொருட்டு பனம் பொருள் அபிவிருத்தி சபைக் கிளை ஒன்று இங்கு திறக்கப்படவுள்ளது.


**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—கே.ஆர்.விஜயா
**கிருகப் பிரவேசம்**



**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
**தெ ய் வ ம்**



**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் (இருவேடம்)
ஸ்ரீகாந்த்-பிரமிளா
**கைநிறைய காசு**
(புதிய பிரதி)


தமிழக

# அருங்கொடை இயக்கம் யாழ். நகரில் நற்பணி

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தைச் சேர்ந்த கோட்டாறு மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருங்கொடை இயக்கத்தினர், கடந்த செவ்வாய்க்கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு, நோயாளர்களுக்கும் அசுத்த அரூபிகளால் பீடிக்கப்பட்டவர்க்கும் என விசேட வழிபாட்டில் ஈடு பட்டு நற்பணி புரிந்தனர்.

அருட்திரு. வல்டாறிஸ் அடிகள் தலைமையில் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற இவ் வழிபாடுகளில் கலந்து கொண்ட ஏராளமான மக்கள் உடல் உள நோய்களிலிருந்துவிடுதலைபெற்றனர்.

அத்துடன் அசுத்த அரூபிகளால் பீடிக்கப்பட்டவர்கள் பலர் செபநேரத்தில் மூர்ச்சித்து விழுந்து சுகமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

பரிசுத்த ஆவியின் அருளால் இக் குழுவினர் இவைகளைச் செய்தனர் என்பது முக்கியமானது இவர்கள் மன்டத்தரிப்பு-யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் நடத்திய பின் இன்று சனிக்கிழமை மன்னார் மறை மாவட்டத்தில் தியான வழிபாட்டை ஆரம்பிச்சின்றனர். இவர்கள் இலங்கையில் இம்மூன்று இடங்களிலும் மட்டுமே தமது முகாமை நடாத்துவார்கள் எனத்தெரிய வருகிறது. (ஓ)

# அணுஆயுத உற்பத்தியில் இஸ்ரேல் இறங்குகிறதா?

பெய்ரூட், மார்ச் 21

இஸ்ரேல் அணுஆயுத உற்பத்தியில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு அத்தாட்சியாக அண்மையில் அத்லாந்திக் சமுத்திரத்தில் இஸ்ரேலும் தென்னாபிரிக்காவும் அணு ஆயுத பரிசோதனை நடத்தியது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அணுஆயுத உற்பத்திக்கு இஸ்ரேலிடம் மூலப்பொருட்கள் கிடையாது என்றும் ஆனல் தென்னாபிரிக்க இனவாதிகளுடன் சேர்ந்து செயல்படுவது இஸ்ரேலுக்கு அனுகூலமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அணுஆயுதம் பரவுதலைத் தடைசெய்யும் சர்வதேச உடன்படிக்கையில் டெல் அவிவ் கையொப்பமிடவில்லை. இந்தப் பின்னணியில் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆயுதம், பணம், தொழில்நுட்பம் முதலியவற்றை வழங்குவது இஸ்ரேலின் மனப்பான்மைக்கு சாதகமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஒரு ஜோதி...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்திக்குழுவில் உறுப்பினராக இருந்து, படித்த சிறுபான்மைத்தமிழ் வாலிபர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கொடுத்தார்.

அமரர் ஜி நல்லையா தாம் எடுத்துக்கொண்ட கொள்கையிலிருந்து இம்மியளவும் விலகமாட்டார். தமக்குச்சரியெனப்பட்டதை செயலில் காட்டிய தீரர் அவர். இவரது இழப்பு சிறுபான்மையின மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். இறக்கும் பொழுது இவருக்கு வயது-67 ஆகும். இவரின் ஆத்மா சாந்தி அடைக!


**SRIDHAR - Jaffna** **2nd Crowded Week**
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00, 9-30 p.m.




FRED WILLIAMSON
in
**THAT MAN BOLT**
WITH
MIKE STONE — World Professional Light Heavy weight Karate Champion
KEN KAZAMA — Japan Kick-Boxing Champion
EMIL FARKAS — European Black Belt Karate Champion
DAVID CHOW — Former California State Judo Champion

BIG NAME IN KARATE
**"That Man Bolt"**
BIG NAME IN POWER, STRENGTH AND VIGOUR
**"That Man Bolt"**
BIG NAME IN ENTERTAINMENT
**"That Man Bolt"**



**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
10-30 a.m., 4-45, 7-00, & 9-45 p.m.
GENE HACKMAN
in
**Domino Principle**
(Color)



பல வெற்றிப்படங்களை திரையிட்டு ரசிகர்களை மகிழ்வித்த
வின்ஸர் ஸ்தாபனத்தாரின் மகத்தான ஈஸ்ரர்-புத்தாண்டு வெளியீடு!
கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் வெற்றிநடை போடுகின்றது
தினசரி 4 காட்சிகள்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
"கிழக்கே போகும் ரயில்" புகழ்
✶ சுதாகர் ✶ ராதிகா ✶ விஜயன்
✶ ரதி ✶ பாக்கியராஜ் ✶ கலா
மற்றும் பலர் நடித்த
காதல், வீரம், மர்மம் நிறைந்த தீந்தமிழ் திரையோவியம்
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணப்படம்)
திரைக்கதை டைரக்ஷன்: வெள்ளிவிழா இயக்குநர் பாரதிராஜா
இசையமைப்பு: இளையராஜா



2nd CROWDED WEEK
**REGAL** JAFFNA Phone: 360
Daily at 10-30 a. m. 2-00, 4-30, 7-00 & 9-30 p m
Daily 5 Shows
From the Jungles of the Caribbean...
to the streets of New Orleans
The evil of Mr Big... and the Mystery of Solitaire
007 is where the action is...
ROGER MOORE as JAMES BOND
Ian Fleming
**LIVE AND LET DIE**




More Suited for Adults
All Passes Suspended
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் டிக்கட் டிற்கு முந்துங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-3-24
PERIODICALS DIVISION
LIBRARY

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## பொலிசார் விசாரணை

(யாழ்ப்பாணம்)
யாழ் சென்றல் சென் ஜோன்ஸ் வருடாந்த மோதலின் நேர்முக வர்ணனைகள், அறிவிப்புக்கள், சிறப்புமலர் ஆகியவற்றைத் தமிழ்மொழியில் வெளியிடு ...று கல்லூரி நிர்வாகத்திற்கு கடிதம் எழுதியவர் யாழ். பொலிசாரினால் நேற்றுவிசாரணைக்குட்டடுத்தப் பட்டார். (இ)




நிக்கோவுக்கு ...

## வடக்கின் மாபெரும் கிரிக்கட் மோதல்

# சென்ஜோன்ஸ்--9-228
# மத்தியகல்லூரி--2-75

(யாழ்ப்பாணம்)
சென்றல் - சென்ஜோன்ஸ் ...வது வருடாந்த மோதலின் முதல்நாள் ஆட்டத்தில் சென் ஜோன்ஸ்கல்லூரி தனது 1வது இன்னிங்ஸில் 9 விக்கட்டுகளை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து ஆடிய யாழ் மத்திய கல்லூரி ஆட்ட நேர இறுதியில் 2 விக்கட்டுகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுக்காலை பூவா தலையா போட்டுப் பார்த்ததில் வெற்றி பெற்ற பரியோவான் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது.

நம்பிக்கையுடன்ஆட்டத்தை ஆரம்பித்த சென் ஜோன்ஸ் கல்லூரியின் முதலாவது விக்கட் 4 ஓட்டங்களை எடுத்த நிலையில்வீழ்ந்தது. தொடர்ந்து மைதானத்திற்கு வந்த வீரர்கள் நிதானமாக ஆடி ஓட்டங்களை வேகமாகப் பெற்றனர்.

தேனீர் இடைவேளையுடன் 240 நிமிடங்களில் 9 விக்கட்டுகளை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் காப்டன் ஈ. ஜே. ஜெபரத்தினம் ஆட்டத்தை நிறுத்தினார். உதவிக்காப்டன் என். வசந்தன் 63 ஓட்டங்களையும் டி. எம். இரத்தினராஜா 58 ஓட்டங்களையும் எஸ். ஜெயக்குமார் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

வேகப்பந்து வீச்சுவீரர் ஆர் பாலகுமார் 27ஓவர்களில் 100 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுகளைக் கைப்பற்றினார், கே. தோமஸ் 21 ஓவர்களில் 65 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.


ஜி. அனுருத்திரன்
மத்திய கல்லூரி காப்டன்

அடுத்து ஆடிய மத்திய கல்லூரி ஆட்டநேர இறுதிவரை 2 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 120 நிமிடங்களில் 75 ஓட்டங்களைப்பெற்றது.

காப்டன ஜி அனுருத்திரன் 25ஓட்டங்களுடனும் பி உதயகுமார் 15 ஓட்டங்களுடனும் கொண்டிருந்தனர். ஆரம்ப துடுப்படி வீரர் வி. ஞானரத்தினசிங்கம் வேகமாக ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டிருந்த வேளையில் 'ரன்-அவுட்' ஆனார்.

எஸ். தனஞ்செயன் 7 ஓவர்களில் 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கட்டைக் கைப்பற்றினார்.

### ஸ்கோர் விபரம்

சென். ஜோன்ஸ்

| | |
|---|---|
| டி. ரவீந்திரன் | ...04 |
| என். வசந்தன் | ...63 |
| ரி. தஞ்சரத்தினம் | ...03 |
| ஈ. ஜே. ஜெபரத்தினம் | 12 |
| டி.எம்.இரத்தினராஜா | 58 |
| எஸ். கருணகுமார் | ...24 |
| எம். பிரபாகரன் | ...00 |
| எஸ். ஜெயக்குமார் | —35 |
| எஸ். சிவநாயகம் | ...01 |
| வி. கதிர்காமநாதன் | ...15 |
| (ஆட்டமிழக்கவில்லை) | |
| எஸ். தனஞ்செயன் | ...00 |
| (ஆட்டமிழக்காமல்) | |

மத்தியகல்லூரி

| | |
|---|---|
| கே. உமாசுதன் | ...05 |
| ரி. ஞானரத்தினசிங்கம் | 25 |
| ஜி. அனுருத்திரன் | ...25 |
| (ஆட்டமிழக்காமல்) | |
| பி. உதயகுமார் | ...15 |
| (ஆட்டமிழக்காமல்) | |

இன்று காலை 10 மணிக்கு 2ம் நாள் ஆட்டம் ஆரம்பமாகும். இன்று இறுதிநாள். (இ)

## இலட்சார்ச்சனை பூர்த்தி இன்று

(சுழிபுரம்)
சுழிபுரம் பறுளை சிவசுப்பிரமணியசுவாமி கோவில் இலட்சார்ச்சனை பூர்த்திவிழா இன்று சனிக்கிழமை இரவு நடைபெறும். சென்ற ஐந்துதினங்களாக அர்ச்சனை நடைபெற்று வந்தது. [இ]

## இசைவகுப்பு

(யாழ்ப்பாணம்)
அராலி தமிழ் இசைக் கலா மன்றத்தின் இசைவகுப்பு இன்று சனிக்கிழமை அராலி தெற்கு கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் சங்கீத வித்துவபூஷணம் திரு. அய்யாக்கண்ணுதேசிகரால் (இசை ஆசிரியர்) ஆரம்பித்துவைக்கப் படுகிறது.

திரு. மு. ஒப்பிலாமணி தலைமையில் நிகழும் இவ்வைபவத்தில் யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம், சங்கானை வட்டார உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் ஆகியோரும், யாழ். செயலக கலாச்சார உத்தியோகத்தர் செல்வி பூ. விநாயகமூர்த்தியும் ஆசிஉரை வழங்குவார்கள். (நா)

விற்பனைக்கு

22 ஸ்ரீ 4765 மொறிஸ் லொறி,
33 ஸ்ரீ 1507 ஒஸ்ரின் A 55 வான்

ஆகிய இரண்டு வாகனங்கள் விற்பனை சம்பந்தமாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 1980 ஏப்ரல் மாதம் 3-ம் திகதிக்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

த பிறின்ஸ் கம்பெனி
249 C, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7680
முன்னேற்பாட்டின்படி வாகனங்களைப் பார்வையிடலாம்.

## மன்னார்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
னேம். அமைச்சுக்களில் போக்கு வரத்து அமைச்சின் வேலைகளே மிகவும் கஷ்டமான வேலையாகும்' கஷ்டமான வேலையானாலும் திறமையாக சேவை செய்வதே அமைச்சரின் முக்கிய நோக்கமாகும். இ. போ. ச. ஊழியர்களின் கூட்டுறவோடு சிறப்பான போக்குவரத்து சேவைகளை நடத்தமுடியும். பொது மக்கள் எம்.பி, சாலை அத்தியட்சகர்கள் ஒன்றிணைந்து போக்கு வரத்துக்கள் சிறப்புடன் நடைபெற உதவி செய்ய வேண்டும் என்றார்.

இலங்கை மத்திய போக்குவரத்துச்சபைக்கு அதிகளவு புதிய பஸ் வண்டிகள் வந்துள்ளன. இப்புதிய பஸ்வண்டிகள் எல்லாச் சாலைகளுக்கும் பகிந்தளிக்கப்படும் 7 ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட இப்போது போக்கு வரத்துச்சபை மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. இப்போது பிரயாணிகள் அதிக அளவில் பிரயாணம் செய்கிறார்கள் இந்த பஸ் நிலையத்தை அமைக்க பெருமளவில் உதவிய மன்னார் வர்த்தகர் சங்கத்திற்கு எமது நன்றி. புதிய பஸ் நிலையத்தை திறந்து வைக்க இன்னும் சில மாதங்களில் போக்குவரத்து அமைச்சர் மன்னாருக்கு வருவார் என்றார்.

## பெல்பொட்டம் வாலிபர் கைவரிசை

# ஜன்னலை உடைத்து வீட்டினுள் புகுந்து கொள்ளை!

(யாழ்ப்பாணம்)
அதிகாலை வேளையில் வீடொன்றின் ஜன்னலை உடைத்து உட்புகுந்த பெல்பொட்டம் அணிந்த மூன்று வாலிபர்கள் வீட்டுக்காரரைக் கட்டிலுடன்கட்டி வைத்து விட்டு ஆயுதமுனையில் அங்கிருந்த பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கட்டுடையில் இடம்பெற்றது.

கட்டுடையிலுள்ள எஸ். இராசநாயகம் என்பவரது வீட்டின் ஜன்னல் கம்பியை உடைத்து உட்புகுந்த மூன்று வாலிபர்களும் அவரைக் கட்டிலுடன் கட்டிவிட்டு ரேப்றெக்கோடர், கசட்ரேடியோ, மணிக்கூடு, தணியகைகள்சுமார்போன்ற 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையகுத்துள்ளனரெனப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது கட்டிலுடன் கட்டப்பட்டிருந்த இராசநாயகத்திற்கு வாலிபரொருவர் கிறிஸ்கத்தியைக் காட்டிப் பயமுறுத்த மற்றைய இருவாலிபர்களும் பொருட்களைக் கொள்ளையடித்துள்ளனராம்.

இதுசம்பந்தமாக ஆனைக்கோட்டை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சரச்சந்திரா தலைமையில் பொலிசார் புலன் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

(பண்-திரு-வெ)

## யாருடையது?

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த ஏ. யோகேந்திரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட சாவிக் கொத்து ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர், தகுந்த அத்தாட்சிகாட்டி பெற்றுக் கொள்ளவும்.

## பிரேரணை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி(
விமலசேன கலாநிதி விஜயதிலகாவுக்குக் கூறியதன் மூலம் ஹைட்ரோ கிருக்கர் கேள்வியில் தொழில் நுட்ப வர்த்தக தொகை மதிப்பீட்டைக் கையாளும் உத்தியோகத்தர்கள்மீது வற்புறுத்தல் மேற்கொள்ளப்பட்டதா என்பதுபற்றியும்,

3, தற்போதைய கல்விச் சேவைக் குழுவின் தலைவரும் கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சின் முன்னாள் செயலாளருமான திரு. வி எல். வீரசிங்க சொல்லப்பட்ட அமைச்சின் செயலாளர் பதவியை ராஜினாமாச்செய்ய நேர்ந்த சூழ்நிலை சம்பந்தமாகவும்,

4. ''ஹைட்ரோ கிருக்கர்'' சம்பந்தமாக எஸ். என். ஏ எம். நிறுவனத்திற்குச் சொந்தமாக ஒரு முடிவு எடுக்கும் படி கேள்விச் சபைத் தலைவர் என்றமுறையில் திரு. வீரசிங்க மீது கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரினால் வற்புறுத்தல் மேற்கொள்ளப்பட்டதா என்பது பற்றியும்.

5. எத்தேவை, சளுக்காக 'மாதுறு ஓயா கரையோர தாங்கிக் கப்பல் கொள்வனவு செய்யப்பட்டதோ அத்தேவைகளுக்கு முற்றிலும் முரணாகவே காணப்பட்ட அக்கப்பலை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் 1979-ம் ஆண்டு ஏப்ரலில் டாயனிலிருந்து கொள்வனவு செய்த சூழ்நிலை சம்பந்தமாகவும்.

6 பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு அளப்பரிய இழப்பை ஏற்படுத்திய பாரதூரமான தவறுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் மீது கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில்மத்யூ அதிக கண்காணிப்புக் கொள்ளத் தவறினாரா என்றும் அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தவறினாரா என்றும்.

அவ்வாறு செய்யாதவிடத்து அதற்கான காரணம் பற்றியும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்கவேண்டும்.

சபாநாயகரினால் நியமிக்கப்படும் இக்குழுமுன் தோற்றுவதற்கு எவரேனும் ஆட்களை கட்டளையிட்டு அழைக்கவும்—எதுவித ஆவணத்தை அல்லது பதிவேடுகளைக் காண்பிக்கும்படி எவரையும் பணிக்கவும் அவசியம் எனின் அத்தகைய சகல எழுத்து மூல—வாய்மூலசாட்சியங்களை நேரில் பெறுவதற்கும் ஆராய இக்குழுவுக்கு தத்துவம் இருக்க வேண்டும். (ம.இ.)

இ பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ... கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச்மாதம் 22 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QD/3943/78 The Eelanadu P. B. No. 49, Telegram Eelanadu Phone ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org